# கம்புறுபிட்டி பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூன் 05 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 பெப்ரவரி 24 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, கம்புறுபிட்டி பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்புறுபிட்டி பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பரீட்சை மீதியில் கூட்டுத்தொகை ரூபா 108,079,475 தொகையான வருமானமும், ரூபா 104,055,568 கூட்டுத்தொகையான செலவினமும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 13 ஆந் திகதி உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியிலிருந்து பெறப்பட்ட ரூபா 7,000,000 தொகையான கடன் மூலதனம் ஐந்தொகையில் கடன் மூலதனத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 351,850 தொகையான ஆதன வரி மற்றும் ஏக்கர் வரி மற்றும் நீர் சேவைக் கட்டணங்களுக்காக அறவிடப்படுகின்ற பிடியாணைக் கட்டணம் மற்றும் தண்டப் பெறுவனவுகள், வருமானச் செலவினக் கணக்கில் பிடியாணைக் கட்டணம் மற்றும் தண்டப்பணத்தின் கீழ் கணக்கு வைக்கப்பாடமல் உரிய வருமானத் தலைப்பில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டில் 4442225 ஆம் இலக்க வங்கிக் கணக்கின் மீதி ரூபா 90,000 தொகை குறைவாக கணக்கு வைக்கப்பட்ட தவறைச் சரிசெய்வதற்காகத் நாட்குறிப்புப் பதிவு இலக்கம் 13 இன் மூலம் திரண்ட நிதியம் மற்றும் பற்றாக்குறைக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் தொங்கல் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் ரூபா 29,753 தொகையான அறவிட வேண்டிய சம்பளமற்ற விடுமுறைகளின் பெறுமதி கடன்பட்டோராகக் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானமாக ரூபா 8,239,970 தொகை கணக்கு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 87,330 தொகை மாத்திரமே செலவு வைக்கப்படாமையினால் வேறுபாடு ரூபா 8,152,640 ஆக இருந்தது.

(எ) மீளாய்வாண்டில் ரூபா 157,709 தொகையான பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் கடன்பட்டோராகக் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை

### 1.3.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 09 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,682,201 ஆக இருந்ததுடன் பட்டோலைகளின் பிரகாரமும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரமும் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,792,801 ஆனமையால் ரூபா 110,600 வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

மீளாய்வாண்டின் இறுதியில் தொங்கல் கணக்கில் ரூபா 1,451,785 தொகையான செலவு மீதி காணப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சியிருந்த கிடைக்கவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 8,058,539 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சியிருந்த செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 62,287,229 ஆக இருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 168,822,637 கூட்டுத்தொகையான கணக்கு மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,564,000 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,052,444 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 709 | 358 | 1,092 |
| (ii) | வாடகை | 4,280 | 4,725 | 1,428 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,875 | 1,142 | 84 |
| (iv) | ஏனைய வருமானம் | 23,345 | 23,286 | 75,210 |

## 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### 2.3.1 வாகன வாடகை

சாரதி படிகள் மற்றும் எரிபொருள் படிகள் தவிர்த்து கூறு விலைகள் கோரப்படாமல் நாளாந்த வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வான் வாகனத்திற்காக 2012 நவம்பர் மாதத்தில் 16 நாட்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டமைக்காக ரூபா 56,000 தொகையும் எரிபொருள் செலவினங்களுக்காக ரூபா 18,332 தொகையுமாக ரூபா 74,332 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 2.3.2 பிரயாணச் செலவுகள்

(அ) பிரயாணச் செலவினக் கொடுப்பனவுகளுக்காக பிரசுரிக்கப்பட்ட விதி முறைகளின் பிரகாரம் சபையினால் அல்லது பொதுமக்கள் முகவருக்காக கையளிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக மாத்திரம் பிரயாணச் செலவினப்படிகள் பெறக் கூடியதாக இருந்த போதிலும் அவ்வாறு எந்த செயற்பாடுகளும் கையளிக்கப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 315,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தென் மாகாண பிரதம அமைச்சு மற்றும் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சரின் 2005 ஒக்தோபர் 05 ஆந் திகதிய 1413/15 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் 3(1)(1) விதிக்கு முரணாக உறுப்பினர் படி செலுத்தும் போது உரிய மாதத்தில் நடத்தப்பட்ட சபைக் கூட்டங்கள் மற்றும் செயற்குழுக் கூட்டங்களுக்குச் சமூகமளிக்காத

வைத்தியச் சான்றிதழ் சமர்ப்பிக்காத 04 உறுப்பினர்களுக்கு ரூபா 30,000 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

### 2.3.3. காகிதாகிகள் அலுவலக உபகரணங்கள் மற்றும் மின்சார உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

2012 ஆம் ஆண்டில் காகிதாகிகள் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக முறையே ரூபா 294,975 தொகை மற்றும் ரூபா 781,048 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 178 இன் பிரகாரம் கூறுவிலைகள் கோரப்பட்டிருக்கவில்லை.

### 2.4 ஒப்பந்த நிருவாகம்

அக்குறுகொட நிதன்கல கந்த வீதிக்கு கொங்கிரீட் சிறுகற்கள் பதித்து அபிவிருத்தி செய்வதற்காக விவசாயச் சங்கத்துடன் 2012 யூன் 06 ஆந் திகதி ரூபா 967,742 தொகை பெறுமதியான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2012 நவம்பர் 08 ஆந் திகதியில் பூர்த்தி செய்த வேலை அறிக்கையின் பிரகாரம் ரூபா 963,043 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட வேலைப்பட்டோலையின் விடய இலக்கம் 07 இன் கீழ் வழங்கப்பட்ட கொங்கிரீட் சிறுகற்களுக்காகவும் விடய இலக்கம் 08 இன் கீழ் வீதியில் கல் பதிப்பதற்காகவும் ரூபா 707,080 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 2013 ஒக்தோபர் 02 ஆந் திகதிய பௌதிகப் பரீசோதனைச் சந்தர்ப்பம் வரையிலும் அந்த சிறு கற்கள் பதித்த சில இடங்கள் கீழிறங்கியிருந்தது.

(ஆ) வீதியில் சிறுகற்கள் பதிக்கும் விடய இலக்கம் 08 இன் கீழ் 525 சதுர மீற்றரை நிறைவேற்றும் ஆலோசனையின் பிரகாரம் 1½ x 2" அளவிலான மணல் படையொன்றை பரப்புவதற்காக ரூபா 142,827 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் வீதியின் இடைக்கிடையே கீழிறங்கியிருந்தமையினால் அந்த விடயங்களின் வேலை குறிப்பிடப்பட்ட நியமங்களில் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பல வருடகாலமாக செயற்பாடற்றுக் காணப்பட்ட இரண்டு டெக்டர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 இன் 74 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் அதிகாரச் சட்டத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் தலைவரை உள்ளடக்கிய சகல உறுப்பினர்களினாலும் 2012 ஆம் ஆண்டிற்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வெளிப்படுத்துகைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது வீதி விளக்குகள் மற்றும் உபசரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 584,442 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் பெறுவனவுகள் மற்றும் விநியோகித்தல்கள் நாளதுவரையாகப் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,254,681 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 67,913 தொகை அறவிட முடியாத ஊழியர் கடனாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் சபையின் இலக்கு மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 03 வருடங்களுக்குக் குறையாத காலத்திற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிற்காக அவ்வாறான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்காக 2006 சனவரி 25 ஆந் திகதிய ஜா.பிர.நி/ பிர.வி.நி/18 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 42(ஆ) பந்தியின் பிரகாரம் கொள்வனவுத் திட்டம் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு